**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No.249/2026,**

**Tirupathur Town PS**

**Cr.No.16/2024**

| | | | |
|---|---|---|---|
| 1 | Deposition of Witness for | : | PW1 |
| 2 | Name | : | அஞ்சலி |
| 3 | Father/Husband Name | : | பாபு |
| 4 | Village | : | சிவராஜ்பேட்டை |
| 5 | Taluk | : | திருப்பத்தூர் |
| 6 | Calling | : | துப்புரவு பணியாளர் |
| 7 | Age | : | 42 |
| 8 | List of witness | : | Lw1 |

Solemnly affirmed by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **17.06.2026**

எதிரி ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் –11.23 A.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 11.44 A.M.

<u>முதல் விசாரணை</u>:–

நான் மேற்படி முகவரியில் வசித்து நான் திருப்பத்தூர் அரசு மருத்துவனையில் துப்புரவு பணியாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 07.01.2024 அன்று மாலை 06.00 மணியளவில் அச்சுதன் பெட்ரோல் பங்க் எதிரில் விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்பட்ட சமயம் நான் என் வீட்டில் இருந்தேன். என் வீட்டிற்கு பக்கத்தில் உள்ளவர்கள் எனக்கு தொலைபேசி மூலம் என் கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். என் கணவர் வேலைக்கு சென்று திரும்பிக்கொண்டிருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தவர் சாலை ஓரமாக வாகனத்தை நிறுத்தி வாகனத்திலிருந்து தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தவரை எதிரில் வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள். என் கணவரை அரசு மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்த பிறகு எனக்கு விபத்து குறித்து சொன்னார்கள். நான் உடனடியாக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல சொன்னார்கள். கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனயிலிருந்து தருமபுரி அரசு மருத்துவமனகைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைத்தார்கள். தருமபுரி அரசு மருத்துவனையில் இரண்டு நாட்கள் உள்நோயாளியாக இருந்த என் கணவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என் கணவரின் விபத்து தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான்

கொடுத்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் **<u>அ.த.சா.ஆ.1.</u>** வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

நீங்கள் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் எதுவரை படித்துள்ளீர்கள் என்றால் 12–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்து குறித்து உங்களுக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள சிலம்பரசன் தொலைபேசி மூலமாக தகவல் கொடுத்தார். விபத்தை கேள்விப்பட்டு எங்கு சென்றீர்கள் என்றால் சம்பவ இடம் சென்றேன் அங்கிருந்து என் கணவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவனைக்கு அழைத்துச்சென்றார்கள். நீங்கள் எங்கு பணி செய்கிறீர்கள் என்றால் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் துப்புரவு பணி செய்கிறேன். மருத்துவரிடம் விபத்து குறித்து யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. விபத்து பதிவேட்டில் நீங்கள் தான் உங்கள் கணவரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவரிடம் விபத்து குறித்து தகவலை நீங்கள் தான் சொன்னீர்களா என்றால் இல்லை. விபத்து பதிவேட்டில் விபத்து நடந்த நேரம் மாலை 06.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து குறித்து புகார் எப்போது கொடுத்தீர்கள் என்றால் 10.01.2024 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரை யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். புகாரில் எத்தனை மணிக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் மாலை 06.30 மணிக்கு. உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில்

சொல்லியுள்ள தகவலை தான் புகாரிலும் சொல்லியுள்ளீர்களா என்றால் ஆமாம். விபத்து எங்கு நடந்தது என்றால் அச்சுதன் பெட்ரோல் வங்கி எதிரில் Lenskart எதிரில் நடந்தது. உங்கள் கணவர் விபத்து நடந்தபோது தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. உங்கள் கணவர் தலையில் காயம்பட்டு தான் இறந்தாரா என்றால் ஆமாம். விபத்திற்கு உங்கள் கணவர் தான் காரணம் என்றால் சரியல்ல. நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.06.18 16:33:12 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.